செம்பாக்கம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை - திரு.ச.சரவணன்.,

ந.க.எண்.04 /2023/ஊ.த நாள்04.04.2023

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - செம்பாக்கம் ஊராட்சி - செம்பாக்கம் கிராமம் - M/s. AKSHAYA PVT. LTD என்பவரின் சர்வே எண்.235/1B part, 6B part-ல் 5723 ச.மீ மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1.இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ம.வ./ந.ஊ.உ.இ.(செ.மா.) 125/2022.

2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதை நாள் .03.2023.

3.செம்பாக்கம் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.53.., நாள்21.03.2023. பலவகை வரவு ரசீது எண்.5783, நாள்03.04.2023.

****

உத்திரவு

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், செம்பாக்கம் ஊராட்சி, செம்பாக்கம் கிராமம் M/s. AKSHAYA PVT. LTD என்பவரின் சர்வே எண்.235/1B part, 6B part-ல் 5723 ச.மீ மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கைகளின்படி, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சாலைகள் (மூலை முடுக்கு உட்பட) பரப்பு 2.25 மீ **தானபத்திர எண்.6720/ 2023 நாள்** 18.03.2023-ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.2,48,408/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நாநூற்று எட்டு மட்டும்) ஊராட்சியில் செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம்

மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றம் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ண்பபதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
4) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.
5) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
செம்பாக்கம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

M/s. AKSHAYA PVT. LTD.

ஊராட்சி படிவம் எண் : 6

No. A 5783

பலவகை வரவு ரசீது

அசல்

பற்றுச் சீட்டு எண்.

நாள் : 04-04-2023

திரு M/S. AKSHAYA PVT. LTD கிராமம் மைலாகுடி என்பவரிடமிருந்து

ரூபாய் 1,48,400/- (ரூபாய் ஒரு லட்சத்தி நாற்பத்தி எட்டாயிரத்து நானூறு மட்டும்)

மனை மேம்பாடு அனுமதி கட்டணம் வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம்.

ஊராட்சி செயலர்.

தனி அலுவலர் / ஊராட்சி தலைவர்.

எண். 53, சம்பாக்கம் ஊராட்சி
திருப்போரூர் ஒன்றியம்
செங்கல்பட்டு மாவட்டம்

குறிப்பு:
1. இந்த பற்றுச் சீட்டு தனி அலுவலர் / ஊராட்சி தலைவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

ரெட்கோ, செங்கை.